**<u>எ.ம.சா.1– பழனிச்சாமி</u>** **<u>Trust.O.P.No.61/2023</u>** **11.11.2025**

**<u>மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி –</u>**

எனது பெரியபாட்டி பொன்னம்மாளின் மகன் குருசாமிக்கு பழனிக்குமார் மற்றும் மருதையா ஆகிய இருவர்கள் வாரிசுகள் ஆவார்கள் என்றால் சரிதான். குருசாமியுடன் பிறந்த சகோதரர் சேதுராமலிங்கத்தின் மகன்கள் சேதுகண்ணன் கனகராஜ் மற்றும் சேதுசிங்காரவேலன் ஆவார்கள் என்றால் சரிதான். எனது சித்தப்பா பிள்ளையார் என்ற வெங்கடாச்சலத்தேவரின் மகன் சீனிவாசகம் என்றால் சரிதான். பழனிக்குமார் என்பவர் என் மீதும், சீனிவாசகம், கனகராஜ், சேதுகண்ணன், சிங்காரவேலன் மற்றும் ராமமூர்த்தி, சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவில் செயல் அலுவலர் மீது வத்ராப், முன்சீப் கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனக்கு சம்மன் சார்பு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் டிரஸ்ட்டானது பழனிக்குமாருக்கும், சீனிவாசகம், கனகராஜ், சேதுகண்ணன், சிங்காரவேலன், ராமமூர்த்தி ஆகியோர்களுக்கும், எனக்கும் பொதுவாக பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவதுதான் பழனிக்குமார் வத்ராப், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.72/2024 வழக்குரை நகல் என்றால் சரிதான். அது **ம.சா.ஆ.15** ஆகும். பழனிக்குமார் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் அன்னதானம் டிரஸ்ட் மேற்படி வழக்கில் கண்ட வாதி மற்றும் 1 முதல் 6 பிரதிவாதிகளின் வகையறாவுக்கு பொதுவாய் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் சர்வே எண்.1223/1, 1223/4 ல் அடங்கிய 2 ஏக்கர் 74 செண்டில் 30 செண்ட் போக 1 ஏக்கர் 46 செண்ட் நிலத்தினை சொத்து விபரமாக காட்டியுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களில் அடங்கிய 30 செண்ட் நிலத்தினைத்தான் 1ம் எதிர்மனுதாரர் கோவிலுக்கு நாங்கள் தானமாக எழுதிக் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 1 ஏக்கர்

46 செண்ட் நிலத்தில் விவசாயம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரிதான். மேற்படி நிலத்தின் ஒரு பகுதியில் கடைகள் கட்டப்பட்டு நான் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். அது தற்காலிக கடைகள் ஆகும். குறைவான வாடகை ஆகும். ஒரு கடைக்கு எவ்வளவு வாடகை என்றால் ரூ.500 முதல் ரூ.1000–க்குள் இருக்கும். மொத்தம் 15 கடைகள் கட்டப்பட்டுள்ளது. மற்றொரு பகுதியில் அன்னதானக்கூடம் கட்டப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி கடைகள் கட்ட போட்ட நிலம் போக மற்ற நிலத்தில் விழாக்காலங்களில் கோவிலுக்கு வரும் இருசக்கர, நான்கு சக்கர வாகனங்கள் வாடகை அடிப்படையில் பார்க்கிங் செய்வதற்கு விட்டுள்ளோம் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்திற்கும், நான்கு சக்கர வாகனத்திற்கும் பார்க்கிங் கட்டணம் எவ்வளவு என்று சொன்னால் அதனை எனது சித்தப்பா மகன் சேதுகண்ணன் பொறுப்பில் பார்த்து வருகிறார். சேதுகண்ணன் என்பவர் பழனிக்குமார் தாக்கல் செய்த அ.வ.எண்.72/2024 என்ற வழக்கில் 4ம் பிரதிவாதி என்றால் சரிதான். சதுரகிரி மகாலிங்கம் மலைக்கு செல்வதற்கு வருடம் முழுவதும் அனுமதி வழுங்கப்பட்டுள்ளதா என்றால் சில சமயங்களில் அரசு அனுமதி மறுக்கப்படுகிறது. அமாவாசைக்கும், பௌர்ணமிக்கும் குறைந்த பட்சம் ஆயிரம் இருசக்கர வாகனங்களும், 500 நான்கு சக்கர வாகனங்களும் வரும் என்று சொன்னால் அது குறித்து என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. சில சமயங்களில் கூடுதலாகவும், சில சமயங்களில் குறைவாகவும் வண்டிகள் வருவது உண்டு. வாகன காப்பகம் மூலமாகவும், கடைகள் மூலமாகவும் வரக்கூடிய வருமானம் குறித்து சேதுக்கண்ணன் என்பவர் கணக்கு வைத்துள்ளார். ஒரு மாதத்திற்கு மேற்படி சொத்தில் இருந்து ரூ.2 லட்சம் வருமானம் கிடைக்கும் என்றால் அது பற்றி என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. மாதத்திற்கு ரூ.2 லட்சம் வருமானம் வரும் என்றும், குறிப்பிட்டு சொல்ல முடியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பழனிக்குமார் என்பவர்

தாக்கல் செய்த வழக்கில் 10 வருட காலங்கள் குருசாமி தேவர் குடும்பம் சொத்தை அனுபவித்து வர தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. குருசாமி தேவர் குடும்பத்திற்கு 10 வருட காலங்களுக்கு அனுபவிக்க விடப்பட்டதை நாங்கள் இடையூறு செய்த காரணத்தினால்தான் பழனிக்குமார் அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார் என்றால் நாங்கள் சொத்தை அனுபவிக்க கொடுக்கவில்லை, டிரஸ்ட் நிர்வாகத்தை 5 வருடம் நடத்துவதற்கு மட்டுமே அனுமதி அளித்தோம். நாங்கள் டிரஸ்ட் சொத்தில் இருந்து கிடைக்கும் வருமானத்தை கொண்டு தர்ம காரியங்கள் செய்யவில்லை என்றும், எங்கள் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி கொள்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு அவசியம் இல்லை. தர்ம காரியங்கள் நடத்துவதற்குத்தான் பயன் படுத்தி வருகிறோம். 1ம் எதிர்மனுதாரருக்கு அறக்கட்டளை சொத்தினை 30 செண்ட் தானமாக எழுதிக்கொடுத்த ஆவணம்தான் எ.ம.சா.ஆ.3 என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுக்க எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் கோவிலிலிருந்து கேட்டதால்தான் நாங்கள் எழுதிக் கொடுத்தோம். நான் தாக்கல் செய்த எ.ம.சா.ஆ.4 அழைப்பிதழில் எந்த சர்வே எண்ணில் அமைந்துள்ள நிலத்தில் அன்னதானம் நடைபெறுகிறது என்ற விபரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.4 மற்றும் எ.ம.சா.ஆ.5 அழைப்பிதழ் எனது பாட்டி கோதையம்மாளின் பெரியப்பா வெங்கடாச்சல தேவரின் மகன் ஸ்ரீமான் சீனிவாசகத்தேவர் நினைவாக நடத்தப்படும் அறக்கட்டளை சம்பந்தப்பட்ட அழைப்பிதழ் என்றால் அந்த அழைப்பிதழில் ஸ்ரீமான் சீனிவாசக தேவர் நினைவாக என்று மட்டும் கூறியுள்ளோம். எ.ம.சா.ஆ.4, எ.ம.சா.ஆ.5 ஆகிய அழைப்பிதழுக்கும், தாவா டிரஸ்ட்டுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.6 ல் உள்ள முதல் புகைப்படத்தில் வத்ராப், மறவர்

தெற்கு தெரு ஸ்ரீமான் சீனிவாசக தேவர் அவர்கள் நினைவாக நடைபெறும் தண்ணீர் தர்மம் மற்றும் அன்னதான விழா 2010 என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எ.ம.சா.ஆ.6 புகைப்படங்களுக்கும், தாவா டிரஸ்ட்டுக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.6 புகைப்படங்கள் அனைத்தும் ஸ்ரீமான் சீனிவாசக தேவர் பெயரில் நாங்கள் நடத்தும் வேறு ஒரு அறக்கட்டளை சம்பந்தப்பட்டது என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ.7 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.7 ஆவணத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்தில் நடத்தப்படும் டிரஸ்ட் என்ற விபரம் கூறப்படவில்லை என்றால் சரிதான். நான் செட்டியார் சமுதாயத்தால் உருவாக்கப்பட்ட அறக்கட்டளை மற்றும் அதன் சொத்தினை அபகரிக்கும் நோக்கத்துடன் பொய்யாக கட்சி செய்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** – இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்காள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
ஸ்ரீவில்லிபுத்தூர்.